308

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1979 ஏப்ரல் 28

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

Research on Tuberculosis in animals.

* *Q No.* 862.—THIRU S. M. VASAN . Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether any research into the incidence of Tuberculosis in animals have been conducted in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை* பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. மு. வாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நோயைத் தடுப்பதற்காக அரசு மேலும் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க உள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: விவர அறிக்கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கால்நடைகளைப் பாதிக்கும் உருக்கி நோய் மனித இனத்திற்குப் பரவுமா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? அது பற்றி ஏதாவது ஆராய்ச்சி நடத்தப்பட்டு கட்டுரைகள் வெளியிடப்படுமா என அமைச்சர் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

---

* 517 பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 28

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாடுகள், வெள்ளாடுகளின் பால் மூலம் மனித இனத்திற்கு இந்நோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்நோய் பரவுவதை கீழ் குறிப்பிடப் பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் குறைத்து விடலாம் :—

(1) உருக்கி நோய் பாதிப்பினை கண்டறிவதற்கான பரிசோதனைகளை தங்களுடைய கால் நடைகளுக்கு மேற்கொள்ள விவசாயிகளை ஊக்கு விப்பது ;

(2) உருக்கி நோயினால் பாதிக்கப்பட்ட கால் நடைகளை மந்தையி லிருந்து நீக்குதல் ;

(3) தீவிர மருத்துவ ஆய்வின் மூலம் சுவாச, கரு, மடி ஆகிய உறுப்பு களில் உருக்கி நோய் பாதிப்பினைக் கண்டு பிடித்து நோய் உள்ள கால்நடை களைப் பிரித்தல் அல்லது நீக்குதல் ;

(4) பால்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை முறை யாக குறிப்பிட்ட கால அளவுகளில் பரிசோதித்தல் ;

(5) கன்றுகளுக்குக் கொடுக்கும் பால் அல்லது தயிர், உருக்கி நோய் பாதிக்காத கால்நடைகளிலிருந்து பெற்றதாக இருப்பது அல்லது பாலை போதுமான அளவு கொதிக்க வைப்பது, அல்லது முறையாக பதப்படுத்தப் பட்டிருத்தல்.

இந்நோய் பற்றி ஆராய்ச்சிப் பணிகள் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு பணியாளர்களால் சில கட்டுரைகள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வெளியிடப்பட்டு உள்ளன : திருவாளர்கள் கே. பி. சந்திரசேகரன், ஆர். ராமகிருஷ்ணன் ஆகியோர் பசு உருக்கி நோய் கன்றை பாதிப்பது பற்றியும், திருவாளர்கள் கே. பி. சந்திரசேகரன், ஆர். ராம கிருஷ்ணன் ஆகியோர் மைக்கோ பேக்டீரியம் உருக்கி நோய் கிருமிகளால் எருதுகளில் நோய் பாதிப்பு பற்றியும், திருவாளர்கள் வி. டி. பத்மநாபன், பி. என். ராய் ஆகியோர் பன்றிகள் உருக்கி நோய் பற்றியும், திருவாளர்கள் ஜே. எஸ். மோசஸ், கே. நாச்சிமுத்து, ஏ. கோட்டீஸ்வரன் ஆகியோர் உருக்கி நோய் சீரத்தின் மின்குளை ஆய்வு பற்றியும், திருவாளர்கள் டி. ஜே. அப்துல் காதர் விலங்குகளில் உருக்கி நோயைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் பற்றி யும கட்டுரைகள் வெளியிட்டுள்ளார்கள்.